


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வடகிழக்கு பருவமழை 2016 கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (09.09.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 622/2016 நாள்: 09.09.2016

# பத்திரிகைச் செய்தி

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவமழை 2016 கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 2016 காலம் தொடங்க உள்ளது. மேற்படி பருவ மழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் இயற்கை இடர்பாடுகள் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் 09.09.2016 அன்று பிற்பகல் 4.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் நீர்நிலை, குளம், குட்டை மற்றும் ஓடைகளில் மழை வெள்ளம் எந்தவித தங்கு தடை இன்றி செல்ல தடையாக உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற துரித நடவடிக்கை எடுக்கவும், பலவீனமான கரைகளை சரிசெய்யவும், மழை காலத்தில் அணைகளின் நீர்மட்டத்தினை தினந்தோறும் ஆய்வு செய்து நீர்மட்டம் குறைவு செய்யப்பட வேண்டிய தருணத்தில் முன்னதாகவே பொதுமக்களுக்கு உரிய அறிவிப்பு கொடுத்து தாழ்வான மற்றும் பாதுகாப்பான பகுதிகளில் மாற்றம் செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கவும், தேவையான அளவு மணல் மூட்டைகளை இருப்பில் வைத்திடவும், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரம் செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

அவசர காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக தங்க வைக்க ஏதுவாக மாவட்டத்திலுள்ள கல்வி நிலையங்கள், சமுதாய நல கூடங்கள், தனியார் திருமண மண்டபங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து கட்டிடங்களின் பட்டியலை தயார் நிலையில் வைத்திடவும், மின்சார வசதி, குடிநீர் வசதி உள்ளனவா என ஆய்வு செய்திடவும் பொதுப்பணித்துறை கட்டிடங்கள் செயற்பொறியாளர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) ஆகியோர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மழையினால் தண்ணீர் புகுந்துள்ள பகுதிகளில் உள்ள மக்களை காப்பாற்ற தேவையான இரப்பர் படகு, கவச உடை மற்றும் பாதுகாப்பு மிதவை போன்ற மீட்பு உபகரணங்களை தயார் நிலையில் வைத்திடவும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் வெள்ளப்பெருக்கு ஆபத்து காலத்தில் மீட்பு பணி மாதிரி செயல்விளக்கத்தினை மேற்கொள்ளவும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

படகு, கட்டுமரம் மற்றும் நைலான் கயிறு போன்ற உபகரணங்கள் எப்பொழுதும் தயார் நிலையில் வைத்திடவும், படகு உரிமையாளர்கள் பட்டியல் மற்றும் தொடர்பு எண்கள் தயார் நிலையில் வைத்திடவும் மீன்வளத்துறை துணை இயக்குனர் அறிவுறுத்தப்பட்டார்.

மழை காலத்தில் சாலைகளில் முறிந்துவிழும் மரங்கள், மின்கம்பம் போன்றவற்றை உடனுக்குடன் அகற்ற தேவையான புல்டோசர், கிரேன் போன்ற கனரக இயந்திரங்கள்

வைத்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசு ஒப்பந்தகாரர் விபரப்பட்டியல் மற்றும் தொடர்பு தொலைபேசி எண்ணுடன் தயார் நிலையில் வைத்திருக்க நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் அறிவுறுத்தப்பட்டார்.

சாலை ஓரங்களில் நிற்கும் ஆபத்தான மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் அடையாளம் கண்டு அதனை மாற்றம் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க நெடுஞ்சாலை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேலும் மழை புயல் மற்றும் காற்றால் மின்சாரம் தடைபடும் பகுதிகளில் உடனடியாக சென்று சரிசெய்ய சிறப்பு குழு அமைத்திடவும், காற்றினால் மின்கம்பிகள் அறுந்த நிலையில் மின்சாரம் பாய்ந்து மரணம் ஏற்படுகின்ற நிலைகளை தவிர்க்கவும் மின்வாரிய துறையினர் அறிவுறுத்தப்பட்டனர்.

தேவையான அளவு அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைத்திடவும், தேவை ஏற்படும் நிலையில் வினியோகம் செய்திட லாரி போன்ற கனரக வாகன உரிமையாளர்கள் மற்றும் தொடர்பு தொலைபேசி எண்ணுடன் பட்டியல் தயார் நிலையில் வைத்திடவும், பெட்ரோல், டீசல் எரிவாயு தட்டுப்பாடு இல்லாமல் வைத்துக் கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கவும் தமிழ்நாடு குடிமைப் பொருட்கள் விநியோகத் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

தேவையான மருந்துகள் மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் இருப்பு வைத்திடவும் சிறப்புக்குழு அமைத்திடவும் சுகாதாரத்துறை துணை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார்.

கால்நடைகளுக்குரிய மருந்துகள் போதுமான அளவு இருப்பு வைத்திடவும், கால்நடை இறப்பு ஏற்பட்டால் உரிய பரிசோதனை சான்று உடனடியாக வழங்கவும் கால்நடை பராமரிப்புத் துறையினர் அறிவுறுத்தப்பட்டனர்.

பருவமழை காலத்தில் மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் தொலைதொடர்பு கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்பட தேவையான பணியாளர்கள் பணியில் அமர்த்தப்படவேண்டும். இயற்கை இடர்பாடு தொடர்பான நிகழ்வுகளை மாவட்ட நிர்வாகத்திற்கு உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டும். மழைமானிகள் நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்பதனை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டது.

தென்மேற்கு பருவமழை கால இயற்கை இடர்பாடுகளை தெரிவிக்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையின் கட்டணம் இல்லா தொலைபேசி எண்.1077 ஆகும். மேலும் 279090 மற்றும் 279091 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொண்டு மாவட்ட நிர்வாகத்திற்கு விபரம் தெரிவிக்கலாம்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இளங்கோ, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.பொ.இராஜேந்திரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், உதவி ஆணையர் (கலால்) திரு. காளிமுத்து, உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பொது பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு மற்றும் கட்டிடம்) :-**

மாவட்டத்தில் உயர் கல்வி நிலையங்கள், சமுதாய நலக் கூடங்கள், தனியார் திருமண மண்டபங்கள் ஆகியவற்றை இடம் பார்வையிட்டு, மின்சார வசதி, குடிநீர் வசதி உள்ளதா என ஆய்வு செய்து, கட்டிடங்களின் பட்டியலை தயார் நிலையில் வைத்திருக்கவும், நீர் நிலைகள், குளம், குட்டை மற்றும் ஓடைகளில் மழை வெள்ளம் எவ்வித தங்கு தடையின்றி செல்ல தடையாக உள்ள ஆக்கிரமிப்புகளை. உடனே அகற்றவும், நீர் நிலைகளின் பலவீனமான கரைகளை சீர் செய்யவும், அணைகளின் நீர்மட்டத்தை தினந்தோறும் ஆய்வு செய்யவும், நீர்மட்டம் குறைவு செய்யப்பட வேண்டி இருப்பின் உரிய அறிவிப்பு கொடுத்து தாழ்வான மற்றும் பாதுகாப்பற்ற பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றவும், பலவீனமான ஆற்றங்கரையில் உடைப்பு ஏற்பட்டால் உடைப்பினை சரி செய்ய தேவையான மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்கவும், சிறப்பு பணியாளர் குழு அமைத்து 24 மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபடவும், கோதையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் அறிவுறுத்தப்பட்டார்.

**காவல் துறை :-**

மாவட்டத்தில் பருவ மழைகாலத்தில் ஏற்படுகின்ற அனைத்து அவசர பணிகளுக்கும் காவல் துறை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படவும், இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை சாதூர்யமாக கையாளவும், வெள்ளம் ஏற்படும் போது அவசர தகவல் தொடர்புக்கு காவல் துறையில் உள்ள VHF மற்றும் HF ஆகியவற்றை பயன்படுத்தவும், வீடு இடிந்து விழுதல் மற்றும் இடி மின்னலின் போது உயிரிழக்கும் நபர்களுக்கு, காவல்துறை மூலம் முதல் தகவல் அறிக்கை,(FIR) பதிவு செய்து, பிரேத பரிசோதனை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், நாகர்கோவில் காவல்துறை கண்காணிப்பாளர் அறிவுறுத்தப்பட்டார்.

**தீயணைப்பு துறை :-**

மாவட்டத்தில் மழையினால் தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதியில் உள்ள மக்களை காப்பாற்ற தேவையான ரப்பர் படகு, கவச உடை மற்றும் பாதுகாப்பு மிதவை போன்ற அனைத்து மீட்பு உபகரணங்களையும், தயார் நிலையில் வைத்திருக்கவும், மீட்பு பணி மாதிரி செயல் விளக்கத்தை மாவட்டத்தில் உள்ள தாழ்வான பகுதிகள் அனைத்திலும் பிற துறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடத்தி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தீயணைப்புத்துறை நிலைய அதிகாரி அறிவுறுத்தப்பட்டார்.

**மீன்வளத்துறை :-**

மாவட்டத்தில் கடலில் வழக்கத்திற்கு மாறாக ஏற்படும் தட்ப வெப்ப நிலையினை உடனுக்குடன் மீனவர் பகுதிகளில் முன்கூட்டியே அறிவிக்க நடவடிக்கை எடுக்கவும், கடல் அலை, புயல் மற்றும் காற்றால் ஏற்படும் ஆபத்தில் சிக்கி கொள்ளும் மீனவர்களை காப்பாற்ற

தேவையான படகு, கட்டுமரம் மற்றும் நைலான் கயிறு போன்ற உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், படகு உரிமையாளர்கள் படகுகளை தயார் நிலையில் வைத்திருக்கவும், மீன்வளத்துறை துணை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார்.

**நெடுஞ்சாலை துறை :-**

மாவட்டத்தில் மழை காலங்களில், சாலை ஓரங்களில் முறிந்து விழுகின்ற மரங்கள், மின்சார கம்பங்கள் போன்றவற்றினால் ஏற்படுகின்ற, போக்குவரத்து தடைகளை அகற்ற தேவையான புல்டோசர், கிரேன் போன்ற கனரக இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், அத்தகு கனரக இயந்திரங்கள் வைத்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசு ஒப்பந்தகாரர்கள் விபர பட்டியல் (ம) தொலைபேசி எண்கள் போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருத்திருக்கவும், சாலை ஓரங்களில் ஆபத்தான வகையில் நிற்கும் மரங்களை அடையாளம் காணுதல் மற்றும் அதனை மாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கவும், சிறப்பு பணியாளர் குழு அமைத்து, தொடர் கண்காணிப்பில் ஈடுபடவும், நெடுஞ்சாலைத்துறை உதவிப்பொறியாளர் அறிவுறுத்தப்பட்டார்.

**ஊரக வளர்ச்சி துறை மற்றும் பேரூராட்சிகள் :-**

மாவட்டத்தில் சிறிய கண்மாய்கள், ஊரணிகள், கால்வாய் மற்றும் கிராம வடிகால் அமைப்புகள் ஆகியவற்றின் ஆக்கிரமிப்பு விபரத்தினை, சம்மந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவித்து, ஆக்ரமிப்பை அகற்றிட நடவடிக்கை எடுக்கவும், நீர் தேக்கங்களில் உடைப்பு ஏற்படும் நிலையில் உள்ள பலவீனமான பகுதியில் மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்கவும், ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஒன்றிய குழு சாலைகள் மற்றும் பேரூராட்சி சாலைகள் மழையினால் பாதிப்பு ஏற்பட்டால், உடனடியாக சரி செய்யவும், பாதிக்கப்பட்ட மக்களை, தங்க வைக்க, கல்யாண மண்டபம், சமுதாய கூடங்களின் பட்டியலை தயார் செய்யவும், மானாவரி குளங்கள் (மற்றும்) ஊரணிகளின் பட்டியலை தயார் செய்யவும், ஊராட்சிகள மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் செயல் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். பட்டியல் தயார் செய்து தயார் நிலையில் உள்ளதா என்பதனை ஊராட்சி மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**சுகாதார துறை நலப்பணிகள்:-**

மாவட்டத்தில் தேவையான மருந்துகள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் இருப்பு உள்ளதா என ஆய்வு செய்யவும், இன்றியமையாத உயிர்காக்கும் மருந்துகள் கிடைக்கும் இடம் மற்றும் உற்பத்தியாளர்கள் முகவரி மற்றும் தொடர்பு தொலைபேசி எண் ஆகியவற்றை சேகரித்து வைக்கவும், மருத்துவமனைகளில் ஜெனரேட்டர், ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவ வாகனங்கள் இயங்க கூடிய நிலையில் உள்ளதா என சரிபார்த்து வைக்கவும், போதுமான அளவு பிளிச்சிங் பவுடர், குளோரின் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் மருத்துவ பணிகள் இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் நலப்பணிகள் அறிவுறுத்தப்பட்டார்.

**<u>தமிழ்நாடு மின்சார வாரியம் :-</u>**

மாவட்டத்தில் புயல் / மழை / காற்றினால் மின்சாரம் தடைபடும் பகுதிகளில் உடனடியாக சென்று, சரி செய்ய சிறப்பு குழு அமைக்கவும், கிராம பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள மின்கம்பங்கள் மற்றும் தாழ்வான நிலையில் உள்ள மின் கம்பங்கள் உள்ள பகுதிகளை கண்டறிந்து, முன்னதாகவே சரி செய்திடவும், சாலை, தெரு, பகுதிகளில் உள்ள மின் கம்பங்கள் ஒன்றோடன்று உரசி ஆபத்து ஏற்படுகின்ற மரக்கிளைகளை வெட்டி மாற்றவும் உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவுறுத்தப்பட்டார்.

**<u>கால்நடைத்துறை :-</u>**

மாவட்டத்தில் கால்நடைகளுக்குரிய மருத்துகள் போதுமான அளவு இருப்பு உள்ளதா என ஆய்வு செய்யவும், கால்நடை இறப்பினால் தொற்று நோய் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவும், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

**<u>நகராட்சித்துறை:</u>**

நகராட்சி பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மழை நீர் எளிதாக வெளியேற, கழிவு நீர் ஓடைகள் கடந்த இரு வருடங்களுக்கு முன் முழுமையாக தூர் வாரப்பட்டது போன்ற கால அட்டவணை தயார் செய்து தூர் வாரப்படவேண்டும்.

**<u>வருவாய்த்துறை :-</u>**

மாவட்டத்தில் தொலைதொடர்பு கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்பட தேவையான பணியாளர்கள் சிறப்பு பணியில் அமர்த்தப்பட வேண்டும் எனவும், புயல் மற்றும் மழை தொடர்பான வானிலை அறிவிப்புகள், எச்சரிக்கைகள், உடனுக்குடன் மக்களுக்கு தெரியப்படுத்த, தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும், இயற்கை இடர்பாடு தொடர்பான நிகழ்வுகளை மாவட்ட நிர்வாகத்திற்கு உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டும் எனவும், அவசர காலங்களில் நிர்வாகத்திற்கு உதவிடும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள் ஆகியவற்றின் முகவரி மற்றும் தொலைதொடர்பு எண்களுடன் தயார் நிலையில் வைத்திருக்கவும், ஒவ்வொரு வட்டத்திலும் செயல்படும் மழைமானிகள் நல்லமுறையில் செயல்படுகின்றனா என்பதனை அந்தந்த வட்டாட்சியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும், வருவாய் வட்டாட்சியர்கள் மழைமானிகள் அமைந்துள்ள இடங்களை ஆய்வு செய்து நல்ல நிலையில் இயங்குவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

**<u>பொது:</u>**

மாவட்டத்தில் இயற்கை இடர்பாடு காலங்களில் அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்கள் தேவையான அளவில் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும் எனவும், அத்தியாவசிய பொருட்கள் வினியோகம் செய்ய லாரி போன்ற கனரக வாகனங்களின்

உரிமையாளர்கள் மற்றும் தொடர்பு தொலைபேசி எண்ணுடன் பட்டியல் தயாரிக்கவும், அனைத்து நியாய விலை கடைகளிலும், உணவு பொருட்கள் போதுமான அளவு இருப்பு உள்ளதா என தினசரி ஆய்வு செய்யவும், கடலோர நியாய விலை கடைகளிலும் இருப்பு அளவு தினசரி ஆய்வு செய்யவும், மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பெட்ரோல், டீசல், எரிவாயு தட்டுப்பாடு இல்லாமல் வைத்துக்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கவும், மழையால் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்கத் தேவைப்படும் பள்ளி கட்டிடங்களை தேர்வு செய்து, பட்டியல் தயார்செய்து வைத்திருக்கவும், தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். மேலும் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள நீரை, மோட்டார் பம்பு மூலம் வெளியேற்ற வாடகை மோட்டார் பம்பு உரிமையாளர் பெயர் மற்றும் தொலைபேசி எண் போன்ற விபரங்களை உள்ளாட்சி அலுவலர்கள் சேகரித்து வைக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்கண்ட தாழ்வான பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளது.

**1.அகஸ்தீஸ்வரம் வட்டம்:**

| வ.எண். | கிராமம் | பகுதி |
|---|---|---|
| 1. | வடிவீஸ்வரம் வடக்கு | பறைக்கால்மடை |
| 2. | புத்தேரி | ஆணைப்பொத்தை, புத்தேரி பாறையடி ஆதிதிராவிடர் காலனி, புளியடி புதுகாலனி |
| 3. | தேரேகால்புதூர் | கீழதத்தையார்குளம், மேல தத்தையார் குளம் |
| 4. | வடக்கு தாமரைக்குளம் | கீழமணக்குடி, |
| 5. | நீண்டகரை பி | அழிக்கால், பிள்ளைத்தோப்பு |

**2.தோவாளை வட்டம்:**

| வ.எண். | கிராமம் | பகுதி |
|---|---|---|
| 1. | மாதவலாயம் | திருமலைபுரம் |
| 2. | தெரிசனம்கோப்பு | தெரிசனம்கோப்பு, மண்ணடி, |
| 3. | ஞாலம் | குக்கல்விளாகம், கண்டளவு, |
| 4. | தடிக்காரங்கோணம் | புதுநகர், லேபர்காலனி, |
| 5. | திருப்பதிசாரம் | திருப்பதிசாரம் கீழூர், நெசவாளர் காலனி, சண்முக நகர், பீமநகரி, |

**3.கல்குளம் வட்டம்:**

| வ.எண். | கிராமம் | பகுதி |
|---|---|---|
| 1. | திற்பரப்பு | திற்பரப்பு, களியல் நதிக்கரையோரம் |
| 2. | திருவட்டார் | அழகேசபெருமாள் கோவில் தெற்குதெரு, சரூர், |
| 3. | ஆற்றூர் | மூவாற்றுமுகம், வலகுழி, மணன்கனி, உத்திரன்விளை, கழுவன்திட்டை, தாமனூர், புல்லியான்விளை, அன்னியோடு, கமுகன்விளை, |
| 4. | பேச்சிப்பாறை | பேச்சிப்பாறை அணை அருகில் |

## 4.விளவங்கோடு வட்டம்:

| வ.எண். | கிராமம் | பகுதி |
|---|---|---|
| 1. | குழித்துறை நகரம் | குழித்துறை சப்பாத்து பாலம், நேசமணி பாலம், பலியானை, கிருஷ்ணன்கோவில், கடகம்விளை, |
| 2. | ஆறுதேசம் | மாமுகம், மாங்கோடு, கோயிக்கல்தோப்பு, பள்ளிக்கல் |
| 3. | முஞ்சிறை | வட்டார வளர்ச்சி அலுவலகம், கோனார் கோவில், பார்த்திபபுரம். |
| 4. | பாகோடு A | கடந்தான்கோடு, பாறைகுளம், நுள்ளியான்விளாகம், ஏலக்கரை, தென்னம்பாறை |
| 5. | பாகோடு B | திக்குறிச்சி, காஞ்சிவிளை, பள்ளம், மாலையணிந்தான்தோட்டம், மலையாரம்தோட்டம், கடைவிளை, வள்ளக்கடவு, |
| 6. | விளாத்துறை | கண்ணோற்றி, விளாத்திவிளை, மாராயபுரம், |
| 7. | குன்னத்தூர் | முட்டக்குளம், பண்டாரந்தோப்பு, ஓச்சவிளை, கோயிக்காவிளை |
| 8. | ஏழுதேசம் - A | வைக்கல்லூர், |
| 9. | அதங்கோடு | அதங்கோடு, |
| 10 | பைங்குளம் | பரக்காணி |
| 11. | தேங்காய்ப்பட்டினம் | தேங்காய்ப்பட்டினம் |
| 12. | அருமனை | அழியக்கால், குழிச்சல், மரப்பாடி, |
| 13 | வெள்ளாங்கோடு | கொக்கஞ்சி,கொட்டக்காகம், மனசேகரம், |
| 14 | சிதறால் | வட்டவிளை, துண்டத்தாரவிளை, மேக்கரம்விளை, தாணுவான்விளை, தேம்மனூர் பள்ளம், சீனித்தோப்பு, பட்டவன்விளை |

மேற்கண்ட தாழ்வான பகுதிகளை மழை காலங்களில் கண்காணிக்க அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் அனைத்து நிலை அலுவலர்களும் தலைமையிடத்தில் தங்கியிருக்கவும், பெருமழையினால் ஏற்படும் சேதங்களை உடனுக்குடன் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

பெறுநர்:

சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

நகல்: கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும்
வருவாய் நிர்வாக ஆணையர்,
எழிலகம், சேப்பக்கம்,
சென்னை-5

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.